NOOLAHAM FOUNDATION

**நூலக நிறுவனம்**

**மாதாந்த அறிக்கை – 2016 ஏப்ரல்**

வணக்கம்,

நூலக நிறுவனத்தின் 2016 ஏப்ரல் மாதச் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

**எண்ணிம ஆவணவாக்கம் (Digital Preservation)**

| **வகை** | **எண்ணிக்கை** | **பக்கங்கள்** |
|---|---|---|
| எழுத்தாவணங்கள் | 301 | 17416 |
| கையெழுத்துப் பிரதிகள் | 92 | 230 |
| அழைப்பிதழ்கள் | 71 | 238 |
| புகைப்படங்கள் | 16 | 16 |
| மொத்தம் | 480 | 17900 |

**எண்ணிம நூலகம் (Digital Library)**

- ஆவணவாக்கப்பட்டவற்றில் 48 கலைச்செல்வி இதழ்கள் 252 ஆவணங்கள் வலைத்தளத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மிகுதி ஆவணங்கள் வைகாசி மாதத்தின் முதல் வாரத்தில் பதிவுசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

- ஆவணவாக்கப்பட்ட கலைச்செல்வி இதழ்கள் அவற்றை எம்முடன் பகிர்ந்துகொண்டவர்களின் கோரிக்கைக்கு அமைய அவர்களது வெளியீட்டு நிகழ்வினைத் தொடர்ந்து நூலக வலைத்தளத்தில் பதிவுசெய்யப்படவுள்ளது.

- கையெழுத்துப்பிரதிகள், அழைப்பிதழ்கள், புகைப்படங்கள் என்பன அவற்றிற்கான வார்ப்புருக்கள் உருவாக்கப்பட்டதும் வலைத்தளத்தில் பதிவுசெய்யப்படவுள்ளது.

- இதழியல் தேடலினை இலகுபடுத்துவற்காக முன்னெடுக்கப்பட்ட அறிமுகக்குறிப்பு இணைக்கும் பணியில் இம்மாதம் 22 இதழ்களுக்கான அறிமுகக் குறிப்பு இணைக்கப்பட்டுள்ளது.

**சேகர அபிவிருத்தி (Collections Development)**

- ஆவணவாக்கலில் தெணியான், செல்வமனோகரன், சுந்தரேஸ்வரன், அச்சுதபாகன், தேன்மொழி, சட்டநாதன் ஆகியேரின் சேகரிப்புக்கள் மின்வருடப்பட்டுள்ளது. குறிப்பாக கலைச்செல்வி, அறிவுக்களஞ்சியம் முதலான இதழ்களும் வித்தகம், இந்துசாதனம் முதலான பத்திரிகைகளும் ஆவணவாக்கப்பட்டுள்ளது. இவற்றுடன் கே.எஸ்.ஆனந்தன், வே.குமாரசாமி, இரகுநாதன் ஆகியோரும் ஆவணவாக்கலுக்காக தமது ஆவணங்களை பகிர்ந்துள்ளனர்.

**ஆவணவாக்க அனுமதிகள் (Rights Management)**

ஏப்ரல் மாதத்தில் 12 எழுத்தாளர்களும் 03 வெளியீட்டாளர்களும் தமது வெளியீடுகளை ஆவணவாக்குவதற்கான அனுமதியினை பதிவுசெய்துள்ளனர்.

- **நிறுவனங்கள்**

  1. சந்நிதியான் ஆச்சிரமம்
  2. இணுவில் இந்து மகாசபை
  3. வீரகிருஷ்ண வெளியீட்டகம்

- **எழுத்தாளர்கள்**

  1. செ.குமாரசாமி
  2. நா. யோகேந்திரநாதன்
  3. முஹமட் சுல்தான் அமானுல்லா
  4. த. சிவகுமார்
  5. பொ. சுகந்தன்
  6. பா. துவாரகன்
  7. சி. ரவீந்திரன்
  8. கா. சச்சிதானந்தன்
  9. இயல்வாணன்
  10. ந. வீரமணிஐயர்
  11. பா. மீனாட்சிசுந்தரம்
  12. மு. சாரதா

**வாழ்க்கை வரலாற்றுக் களஞ்சியம்**

- வாழ்க்கை வரலாற்றுக் களஞ்சியம் தொகுக்கும் பணியில் இம்மாதம் 145 ஆளுமைகள் தொடர்பான விபரங்கள் திரட்டப்பட்டதுடன் 77 ஆளுமைகளில் மேலதிக விபரங்களும் இணைக்கப்பட்டன. மொத்தமாக 2700 ஆளுமைகளது விபரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

- இவற்றுடன் ஆளுமை, வாழ்க்கை வரலாற்று நூல்விபரப் பட்டியல் உருவாக்கும் பணியில் இம்மாதம் 27 வெளியீடுகளின் தகவல்கள் உள்ளிடப்பட்டுள்ளது.

**நிதியறிக்கை (Financial Report)**

- ஏப்ரல் மாதத் தேவைகளுக்காக ரூ. 384,866.43 செலவானது. இதில் ஆளணியினருக்கான கொடுப்பனவுகள் 209,700, மேலதிக நிதி பொறுப்பினை அவுஸ்திரேலியாவில் இருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டு 83,000 பெறுமதிமிக்க கணினி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது. இதைவிட உபகரணச் செலவுகள், வாடகை, ஏனைய செலவுகள் என 92,166.43 ஆகியன உள்ளடங்குகின்றன.

- ஏப்ரல் மாதம் அவுஸ்திரேலியாவில் இருந்து 428,830 ரூபாவும் கனடாவிலிருந்து 54,880 ரூபாவும் ஐக்கிய அமெரிக்காவிலிருந்து 14,500 ரூபாவும் இலங்கையிலிருந்து 3,000 ரூபாவும் நன்கொடையாக கிடைக்கப்பெற்றது.

- இவ் நன்கொடையில் மார்ச் மாத செலுத்த வேண்டிய (Payable) செலவுகளும் ஏப்ரல் மாத செலவுகளும் மேற்கொள்ளப்பட்டன. இலாப நோக்கற்று இயங்கும் நூலக நிறுவனம் கொடையாளர்களின் நன்கொடையிலேயே இயங்கி வருகிறது. அவ்வகையில் நன்கொடை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள். தொடர்ந்தும் எம் பணிகளுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி